**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
**அசல் வழக்கு எண். 116/2012**

2019-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை வா.சா.1 (2ம் வாதி) (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.P.சண்முகம், மூன்றாம் நிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | | ஜாதி | : |
| த/பெ | : | | சமயம் | : |
| கிராமம் | : | | வயது | : |
| வட்டம் | : | | தொழில் | : |

---

வா.சா.1 (2ம் வாதி)-ன் முதல் விசாரணை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இவ்வழக்கின் 2ம் வாதி. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கு நிலுவையில் இறந்துவிட்ட 1ம் வாதி எனது அப்பா. 17.10.1977ம் தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து நாராயணசாமி வாண்டையார் மகன் முத்தையனிடமிருந்து இறந்துவிட்ட 1ம் வாதியான என் தந்தை சுப்பிரமணியன் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் அசல் வா.சா.ஆ.1. 9.5.1991 தேதியிட்ட சின்னப்பிள்ளை என்பவரிடமிருந்து தாவா சொத்து அல்லாத தாவா சொத்திற்கு கீழ்புற சொத்தை பொறுத்து பிரதிவாதி சிவசாமி பெயரில் உள்ள கிரைய ஆவணம் பதிவுத்துறை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 21.2.2012ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீது அசலுடன் வா.சா.ஆ.3. 28.2.2012 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய

பதிலறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.4. 8.3.2007 தேதியிட்ட 1ம் வாதியால் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ.5. 28.1.2012 தேதியிட்ட 1ம் வாதியால் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ.6. 9.4.2005 தேதியிட்ட 1ம் வாதியால் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ.7. 1.3.2002 தேதியிட்ட 1ம் வாதியால் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ.8. தாவா சொத்திற்கான மாதிரி வரைபடம் வா.சா.ஆ.9.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது).

(ஒப்பம்) திரு.ஆர்.பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.